## 9 ஏழுகடல் அழைத்த படலம்

சோமசுந்தர்ருடன் தடாதகைப்பிராட்டியாரின் திருமணம் முடிந்த பின்னர் கௌதம முனிவரிடம் காஞ்சனமாலை பிறப்பற்ற நிலையை அடையும் முறையைக் கூறுமாறு வேண்டினாள். பிறப்பற்ற நிலைமையை அடைய உள்ள மூன்று மார்கங்களை அவளுக்கு விளக்கி கூறினார்.

முன் பிறவியில் செய்த நல்ல தவத்தால் லோகநாயகியை மகளாகப் பெற்று, பின் சிவபெருமானையே மருமகனாகப் பெற்ற அவள் பெரும் பாக்கியம் பெற்றவள் என்றார்.

இருப்பினும் முனிவரிடம் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினால் பிறப்பற்ற நிலை அடையும் வழி முறைகளைக் கூறுமாறு வேண்டினாள்

தர்மம் செய்தல், எப்போதும் உண்மையையே பேசுதல், இறைவனை தியானம் செய்தல் மற்றும் ஆசைகளை அடக்குதல் இவை மனத்தைப் அடக்கும் முதல் மார்கமாகும்.

எப்போதும் சிவநாமம் ஓதுவது, வேத நூல்களைப் படிப்பது பின்னர் வேள்விகள் செய்வது வாக்கின் மூலம் செயல்ப்படுவது இராண்டாம் மார்கமாகும்.

மூன்றாம் மார்கத்தில் காயமாகிய அதாவது நமது உடலை வருத்திக் கொண்டு இறைவனை அடையும் முறையை விளக்கினார். யாத்திரை சென்று சிவபெருமானை வழிபட்டு பல புண்ணிய ரதீர்த்தங்களில் நீராடுவது மிகுந்த புண்ணியத்தை சேர்க்கும். மேலும் எல்லா நதிகளும் ஒன்று சேரும் கடலில் நீராடுவது மிகுந்த பலனை அளிக்கும் என்றார்.

இதனைக் கருத்துடன் கேட்ட காஞ்சன மாலைக்கு கடல் நீராட விருப்பம் உண்டாற்று. தன் விருப்பத்தை மகளிடம் தெரிவித்தாள். தேவியும் சுந்தரமூர்த்தியிடம், தன் தாய்க்கு கடல் நீராடத் தோன்றிய விருப்பத்தை நிறைவேற்றுமாறு வேண்டினாள். ஐயனும் திருவுள்ளம் கொண்டு ஒரு கடலுக்கு பதில் ஏழு கடல்களையும் அழைத்தார். அவர் அழைத்த மாத்திரத்தில் அவை யாவும் மதுரைக்கு வந்தன. எங்கும் பேரிரைச்சல். மக்கள் கண்களுக்கு கடல்கள் தெரியவில்லை, ஆயின் அதன் ஓசையைக் மட்டும் கேட்டனர். மக்கள் ஊழி காலம் வந்து விட்டதோ என்று பயந்து சுந்தரேசனை காக்கும் படி சரண்ணடைந்தனர்.

உடனே ஐயனும் ஏழு கடல்களையும் மதுரை மாநகரின் கீழ்திசையிலுள்ள ஒரு கிணற்றில் ஏழு நிறங்களோடு அடக்கினார். அட்டமூர்த்தியான சிவபெருமானுடன் இணைந்து எட்டு வண்ண வான வில்லைப் போல எழிலைப் பெற்றது. கிணற்றில் நீர் நிரம்பி இருப்பதைக் கண்டு மக்கள் மகிழ்ந்தனர். காஞ்சனமாலை தன் பரிவாரங்களுடன் கிணற்றுக்குச் சென்றாள்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு கிழக்கு கோபுரத்திற்கு எதிரேயுள்ள புதுமண்டபத்திற்கு அருகிலுள்ள தெரு ஏழு கடல் தெரு என்ற பெயரில் இன்றும் உள்ளது.

**பல்லவி**

காஞ்சனமாலையும் கௌதர் சொல் கேட்டு
கடல் நீராட ஆசை கொண்டாள்

**அனுபல்லவி**

வாஞ்சயுடன் தாய்க்கு வைகையைப் போல் கடலையும்
வரவழைக்க வேண்டினாள் தடாதகை உன்னிடம்

**சரணம்**

ஏழுகடலையும் ஓர் வாவியுனுள் வரச் செய்தாய்
எழுந்த பேரொளியும் அடங்கச் செய்தாய்
ஏழுகடல் நிறங்களும் இரண்டரக் கலந்துன்
எட்டுவண்ணம் போல் வாவியும் எழிலைப் பொழிந்தது